

ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 6 | செப்டம்பர் 2000 | கானம் : 2

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

**(தெய்வீக மாதப் பத்திரிகை)**

வேணு : 6 செப்டம்பர் 2000 கானம் : 2

## விஷய ஸூசிகை

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளைப் பற்றிய கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 58 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 4 |
| 4. | வேத கதைகள் - 40 | 6 |
| 5. | ஸந்தியாவந்தனம் | 8 |
| 6. | எந்தரோ மஹானுபாவுலு - 28 | 13 |
| 7. | ஜ்யோதிஷம் - 7 | 21 |
| 8. | பாலகர்களுக்கு ஒரு கதை - 34 | 23 |
| 9. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 61 | 26 |
| 10. | மஹாபாரத கதைகள் - -நளோபாக்யானம் - | 29 |
| 11. | செய்திகள் | 31 |
| 12. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |

ஶ்ரீ ஹரி:

# ஶ்ரீ ஸ்வாமிகளைப் பற்றிய கீர்த்தனம்

ராகம் : கரஹரப்ரியா தாளம் : ஆதி

ஆஶ்ரிதானேக பக்தானாம் இஹாமுத்ர ஸுகாய வை ।
தபஸ்யத்யனிஶம் யஸ்தம் ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 1

அயாசிதோSபி பக்தேப்ய: தத்வா ஶ்ரியமகண்டிதம் ।
ஸ்மரதி ந புனர்ஜாது ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 2

ஸ்பர்ஶேன மந்தஹாஸேன கத்யா ஸம்பாஷணைரபி ।
புனாதி லீலயா லோகம் ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 3

அனுக்ரஹ ப்ரதானேன காமதேனு விடம்பனம் ।
க்ருதம் கல்பதரோஶ்சாபி ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 4

அபராதஶதைஶ்சாபி யுதேஷு ஸ்வஜனேஷ்வஸௌ ।
ப்ரியோ பவதி வாத்ஸல்யாத் ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 5

யஸ்ய காருண்ய தாராயை ஸப்தஸப்தஸு ஜன்மஸு ।
ப்ரதீகர்த்தும் ந ஶக்னோமி ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 6

ஸம்யங்நுதேSபி பக்த்யா ந: ரக்ஷதி க்வசிதீஶ்வர: ।
ஆஹூய யஸ்து பாத்யஸ்மான் ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 7

அஶ்ரு புன: புன: முஞ்சன் ஏகாந்தே க்ரந்தனம் வினா ।
நாந்யத் யஸ்ய க்ருபாம் ஸ்ம்ருத்வா ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 8

பகவானேவ ஸர்வாத்மா குருரூபே ச வித்யதே ।
திரோதத்தே ஸ்வமாஹாத்ம்யம் ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 9

ஸர்வக்ஞ: ஸர்வஶக்தஶ்ச ததாபி லீலயா ஸ்வயா ।
அஜ்ஞமிவாசரந்தம் தம் ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 10

ஏவம் கூடஸ்வரூபம் தம் ஸௌலப்ய குணஶாலினம் ।
முரளீதரநாமானம் ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 11

- விஷ்ணுப்ரியா

## மதுரமான மஹனீயர் 58

நமது ஸங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ கல்யாணக்ருஷ்ணன் என்ற பக்தர் நம் ஸ்வாமிகளிடம் அந்தரங்க பக்தி கொண்டவர். ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் நம் ஸ்வாமிகளுக்கு பாத பூஜை செய்து வருகின்றார். எப்பொழுதும் நாம ஜபம் செய்துகொண்டும், பாகவதம் படித்துக்கொண்டும் இருப்பார். நம் ஸ்வாமிகளைப் பற்றி பேச ஆரம்பித்தால் நேரம் போவது தெரியாமல் மணிக்கணக்காக பேசிக் கொண்டிருப்பார். நல்ல பரோபகாரி. நம் ஸ்வாமிகளை எப்பொழுதும் தரிசித்துக் கொண்டிருக்கவேண்டும் என்ற ஆசையினால் அவர் எந்த உத்யோகத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஸமீபத்தில், வ்யாஸ பூஜைக்காக பெங்களூர் வந்திருந்த அவர், வழக்கம்போல் தன்னுடன் பாகவத புத்தகத்தை எடுத்து வந்திருந்தார். பெங்களூரிலிருந்து திரும்புகையில் சென்ட்ரல் ஸ்டேஷனில் பாகவத புத்தகத்தைத் தவற விட்டுவிட்டார். புத்தகம் தவறியது தெரியாமல் Park Station வந்து ஆதம்பாக்கம், அதாவது அவருடைய வீட்டிற்கு வந்துவிட்டார்.

வீட்டிற்கு வந்த பிறகுதான் பாகவதம் புத்தகம் தவறிவிட்டது தெரிந்தது. தான் நித்யம் பாராயணம் செய்து வந்த புத்தகம் தொலைந்து விட்டதை நினைத்து மிகவும் வருந்தி, நம் ஸ்வாமிகளை நினைத்துக் கொண்டு அழுதார். அடுத்த அரைமணி நேரத்தில் முன்பின் தெரியாத ஒருவர் அவருடைய வீடு தேடி வந்து அதே பாகவத புத்தகத்தைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு சென்றுவிட்டார்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

ஆர்வமில்லாதவனுக்கு செய்யும் மந்த்ரோபதேசம் பட்ட மரத்திற்கு நீர் பாய்ச்சுவது போலவாம்.

- ஸ்ரீ ஸ்வாமிகள்

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

***கேள்வி : இறைவனை விழுந்து நமஸ்கரிப்பது அவச்யமா?***

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஆம். மிகவும் அவச்யம்.

***கேள்வி : அப்படி விழுந்து நமஸ்கரிக்கும்பொழுது, ஈடுபாட்டுடன் ஆத்ம ஸமர்ப்பணம் செய்து வணங்கவேண்டும் என்கிறார்களே? அது எனக்குப் புரியவில்லை!***

ஸ்ரீ ஸ்வாமிகள் : நாம் ஒரு ஸங்கத்திற்குப் போவதாக வைத்துக் கொள்வோம். அங்கு அமர்ந்து இருக்கும் ஒருவரை எல்லோரும் விழுந்து வணங்குவதை பார்க்கின்றோம். அங்கு இருக்கும் எல்லோரும் அப்படி செய்வதால் நாமும் அப்படிச் செய்யவேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளாகின்றோம். ஆனால், நம்முடைய மனது அப்படி செய்வதை ஏற்றுக் கொள்ளவில்லை. அப்பொழுது நாம் என்ன செய்வோம்? வேண்டா வெறுப்பாக நமஸ்காரம் செய்வோம் அல்லவா! அதனால், அங்கு நமஸ்காரம் செய்யும்பொழுது மனது ஈடுபடாது. ஆனால், எந்த தெய்வத்திடம் அல்லது குருவிடம் ஈடுபாடு உள்ளதோ அங்கு மனது ஒன்றி ஈடுபட்டு செய்யமுடியும். செய்யவேண்டும்.

***கேள்வி : தங்கள் பதிலைக் கேட்டவுடன் மற்றொரு கேள்வி தோன்றுகின்றது. தாங்கள் சொன்னது போலவே எனக்கு ஒரு ஸம்பவம் நேர்ந்தது. என்னுடைய நண்பன் என்னை ஒரு ஸாதுவின் தர்சனத்திற்கு அழைத்துச் செல்வதாகக் கூறி ஒருவரைப் பார்க்க அழைத்துச் சென்றான். தாங்கள் சொன்னது போலவே அவரை எல்லோரும் விழுந்து வணங்கினார்கள். அதனால், நானும் அப்படி ஒரு நிர்பந்தத்திற்கு ஆளானேன். ஆனால், என் மனது ஈடுபடவில்லை. அது மாதிரி ஸந்தர்ப்பங்களில் என்ன செய்யவேண்டும்?***

ஸ்ரீ ஸ்வாமிகள் : நம்முடைய இஷ்ட தெய்வத்தையோ அல்லது நம்முடைய குருநாதரையோ நினைத்துக்கொண்டு யாரை நமஸ்கரித்தாலும், அந்த நமஸ்காரம் நம் இஷ்ட தெய்வத்தையோ அல்லது நம் குருநாதரையோ சென்றடைந்துவிடும்.

### *கேள்வி : நான் ஹரியைத் தவிர வேறு ஸ்வாமியை பூஜை செய்வதில்லை என்ற ஒரு பிரதிஜ்ஞை செய்துள்ளேன். ஆனால், எனக்கு வாழ்க்கையில் ஸங்கடங்கள் ஏற்படுகின்றன. பலர், நவக்கிரகங்களை பூஜை செய்யச் சொல்லி நிர்பந்திக்கின்றனர். நான் என்ன செய்வது?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : எந்த ஒரு விஷயத்தில் நாம் பிடிவாதமாக இருக்கின்றோமோ அந்த விஷயத்தில்தான் சோதனைகள் வரும். அதையும் நாம் விவேகத்துடனும், மனோபலத்துடனும் கடந்துவிட்டால் பிறகு பெரிய பலன் ஏற்படும். ப்ரஹ்மசாரியமாக இருக்கவேண்டும் என்று ஸங்கல்பித்துக்கொண்ட பீஷ்மருக்கு பல சோதனைகள் ஏற்பட்டது. அதைக் கடந்து அழியாப் புகழ் பெற்றார்.

ஸத்யஸந்தனான ஹரிச்சந்திரனுக்கு, பெரிய சோதனை வந்தது. அத்தகைய நிலையிலும் ஸத்யத்தைக் கடைப்பிடித்து அழியாப்புகழ் பெற்றான். ஸமர்த்த ராமதாஸர் ராமனைத் தவிர வேறு தெய்வத்தை ஸேவிப்பதில்லை என்ற நியமத்திலிருந்தார். அவரை பாண்டுரங்கன் அழைத்து, ராமராகவே தர்சனம் தந்தான். எத்தகைய கஷ்டத்திலும் தன்னுடைய ப்ரதிஜ்ஞையை மீறாமல் இருந்தால் மிகப் பெரிய பயன் ஏற்படும்.

### *கேள்வி : இப்பொழுதும் கூட எத்தனையோ பேர் கல்யாணமாகாமல் ப்ரஹ்மசாரியாக இருக்க பீஷ்மரை மட்டும் ப்ரஹ்மசாரி சிரேஷ்டராக கூறக் காரணம் என்ன? அது போல் பதிவ்ரதைகள் விஷயத்திலும்.*

ஸ்ரீ ஸ்வாமிகள் : கல்யாணம் செய்துகொள்ளாமல் இருப்பதால் மட்டும் ஒருவன் உண்மையான ப்ரஹ்மச்சாரி ஆகிவிடமாட்டான். மனோ, வாக், காயம் மூன்றினாலும் ஸ்திரீ ஸம்பந்தமே இருக்கக்கூடாது. இது அத்தனை ஸுலபமல்ல. ஆகவேதான் பீஷ்மரை கொண்டாடுகின்றோம். அதுபோல் பதிவ்ரதா ஸ்திரிகள் விஷயத்திலும் தான்.

# வேத கதைகள் - 40

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## அஶ்வமேதம் - குதிரையின் தோற்றம்

அஶ்வமேத யாகம் என்பது யாகங்களுக்குள் சிறந்த யாகமாகும். இதை க்ஷத்ரியன்தான் செய்யவேண்டும். வேறு யாரும் செய்யக்கூடாது ராஜா ஸார்வபௌம: அஶ்வமேதேன யஜேத என்று கூறப்பட்டுள்ளது. பகவான் கண்களிலிருந்து குதிரை தோன்றியதாக வேதம் கூறுகிறது. இந்த யாகத்தை பகவான் ராமன் முதல் எல்லா அரசர்களும் செய்ததாக வரலாறு கூறுகிறது. ''பௌண்டரீக அஶ்வமேதாப்யாம் வாஜபேயேந ச அஸக்ருத் என்று ராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது. ராமாவதாரத்திற்கே அஶ்வமேத யாகம் தான் காரணமாக இருந்தது.''

ராமாவதாரத்திற்கு முன்பு தசரதர் பல தடவை அஶ்வமேத யாகங்கள் செய்திருந்தபோதிலும் புத்ரகாமேஷ்டி யாகத்திற்கு முன்பு ஒரு தடவை அஶ்வமேத யாகம் செய்தார். வபாயாகம் செய்யும்பொழுது அந்த வபா ஹோமத்தின் வாசனையை தசரதர் முகர்ந்தார். அதனால் தான் தசரதருக்கு ராமன் பிறந்தான் என்று தெரிகிறது. ''ஹோம கந்தம் வபாயாஸ்து ஜிக்ரதிஸ்ம நராதிப:'' என்ற ஸ்லோகத்தால் இந்த விவரம் கூறப்பட்டுள்ளது.

நூறு அஶ்வமேத யாகம் செய்தால் இந்திர பதவி கிடைக்கும். அதனால்தான் இந்திரனுக்கு ஶதக்ரது என்று பெயர். நூறு அஶ்வமேத யாகம் செய்தவன் என்று பொருள். அதனால்தான் ஸகரன், திலீபன் முதலிய அரசர்கள் நூறாவது அஶ்வமேதம் செய்யும்பொழுது அந்த யாகத்தை தடுத்தான் என்று புராணம் கூறுகிறது. க்ருஷ்ணன் பகவானாக இருந்தும் க்ஷத்ரியனாக இல்லாததால் அஶ்வமேத யாகம் செய்ய முடியவில்லை.

இந்த அஶ்வமேத யாகத்தால் எல்லா நன்மைகளும் கிடைக்கும். ப்ராஹ்மணன் ஒளி மிக்கவனாகவும் தன் கடமைகளை நன்கு செய்பவனாகவும் பிறப்பான். நம் தேசத்தில் க்ஷத்ரியன் நல்ல வில்லாளியாகவும் ஸூரனாகவும் மஹாரதனாகவும் பிறப்பான். மாடுகள்

அதிகமாக பால் கறக்கும். காளைகள் பொதிகளை நன்கு சுமக்கும். குதிரைகள் நன்கு ஓடும். பெண்கள் குடும்ப பாங்கு உள்ளவர்களாகவும், அழகானவர்களாகவும் இருப்பார்கள். இளைஞர்கள் நல்ல படிப்பு உள்ளவர்களாகவும் அவைக்கு முன்பு இருப்பவர்களாகவும் பிறப்பார்கள். நாம் எப்பொழுது மழை பெய்யவேண்டும் என்று நினைக்கிறோமோ அப்பொழுதெல்லாம் மழை பெய்யும். பயிர்கள் நல்ல பயன்களை அளிக்கும். ஜனங்களுக்கு யோக க்ஷேமங்கள் எவ்வித இடையூறுமின்றி நன்கு நடைபெறும். ஜனங்கள் கலகமின்றி நன்கு வாழ்வார்கள். யாவருக்கும் தலைவர்களாக ஆகும் பேறு கிடைக்கும். ஜனங்களுக்கு நன்கு வலிமை ஏற்படும். பால் பெருக்கெடுத்து ஓடும். மற்ற நாடுகளுக்கு நம் நாடு உதாரணமாக இருக்கும். ஜனங்கள் நிலைபெற்று வாழ்வார்கள். எந்த நோயும் அணுகாது. ஜனங்கள் நீண்ட ஆயுள் வாழ்வார்கள். இவ்விதம் எல்லா பயன்களும் கிடைக்கும் என்று வேதங்கள் கூறுகின்றன.

கலி தோன்றிய பிறகு கூட ஹிமயமலைச்சாரலில் ஒரு அரசன் அஶ்வமேதயாகம் செய்ததாக அங்கு கிடைக்கும் கல்வெட்டுகளில் தெரிகிறது. இந்த அஶ்வமேத யாகத்தில் முக்யமாக விளங்குவது குதிரை. அந்த குதிரை கட்டப்படாமல் உலகம் முழுவதும் சுற்றி வரவேண்டும். அதை நானூறு வீரர்கள் பாதுகாத்துச் செல்லவேண்டும். அந்த குதிரையே பகவானின் மறுஉருவம் என்று வேதமும் கூறுகிறது. உஷத் காலம் - அந்த குதிரையின் தலை, ஸூர்யன் - கண், காற்று - ப்ராணன், சந்திரன் - காது, திக்குகள் - கால்கள், இடைதிக்குகள், ஸந்திகள், அஹோராத்ரங்கள், அர்த்த மாஸங்கள், பாவாக்கள், மாஸங்கள், வருஷம் - அதன் நடு உடல், பிடரி மயிர்கள் - ஸூர்யனுடைய கிரணங்கள். குதிரையினுடைய எலும்புகள் - நக்ஷத்ரங்கள், மாம்ஸங்கள் - ஆகாஶம், லோமாக்கள் - ஓஷதிகள், முகம் - அக்னி, மயிர் - கடல் என்று இந்த குதிரையே எல்லாமாக விளங்குகிறது.

இவ்விதம் சிறப்பு பெற்ற அஶ்வமேதத்தால் நாட்டில் உள்ள எல்லா தீமைகளும் விலகி நல்ல நன்மைகள் ஏற்படும். ஒரு ஸமயம், பகவானின் கண் வீங்கியது. வீங்கியகண் கீழே விழுந்தது. கீழே விழுந்த பகவானின் கண்ணிலிருந்து குதிரை உண்டாயிற்று. அஶூவ்யாப்தௌ என்ற தாதுவிலிருந்து அஶ்வம் என்ற சொல் ஏற்பட்டது. ஆதலால் தேவர்கள் அஶ்வமேத யாகம் செய்து கண்ணில்லாத பகவானுக்கே கண்ணை பொருத்தினர். எல்லா புலன்களிலும் கண் ப்ரதானம். கண் உள்ளவன் தான் நிறைவு பெறுகிறான். அஶ்வமேதயாகம் பகவானுக்கே நிறைவை கொடுக்கிறது. இந்த காரணத்தால் அஶ்வமேதயாகம் செய்தால் நாடு சிறக்கும் என்று தெரிகிறது.

# ஸந்தியாவந்தனம்

(ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாபெரியவாள் அவர்கள் முடிகொண்டான் கிராமத்தில் 1934-ல் அருளிய உபதேசம்)

நம்முடைய பெரியோர்கள் ஸந்தியாவந்தனத்தை காலத்திலும், தவறாமலும், விதிப்படிக்கும் செய்துவந்தார்கள். அதனால் எல்லாம் சுபிக்ஷமாக இருந்துவந்தது. இப்பொழுதோ ஆங்கிலப் படிப்பு படித்தவர்களில் அநேகர் ஸந்தியாவந்தனம் செய்வதாகத் தெரியவில்லை. ப்ராசீன, வைதீக குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்கூட, இன்றைக்கு, தம் முன்னோர்கள் செய்து வந்தபடிக்கு, ஸந்தியாவந்தனம் முதலான கர்மாக்களை ஒழுங்காக செய்யாததன் காரணமாக, இப்பொழுது லோகக்ஷேமத்தில் குறைவுபட்டிருக்கின்ற காரியங்கள் தோன்றியிருக்கின்றன.

தற்பொழுதைய நிலையில் அக்னி மறையும் தருவாயில் இருக்கின்றது. இனிமேலாவது எல்லோரும் ஸந்தியாவந்தனத்தை ஒழுங்காகச் செய்ய ஆரம்பித்தால், மறைந்திருக்கும் அக்னி பூர்ண ஜோதியை அடையும். சைக்கிள் வேகமாக வரும்பொழுது பெடல் பண்ணப்படுவது நின்றபோதிலும், கொஞ்சம் தானாகவே சென்று கொண்டிருக்கும். அதுபோல், ஸந்தியாவந்தனம் முதலான கர்மாக்கள் செய்யப்பட்டுவந்த குலத்தில் பிறந்தவர்களில் சிலர், தங்களுடைய கர்மாக்களைச் செய்யாதபோதிலும் முன்னோர்கள் செய்த கர்மபலத்தைக் கொண்டு இப்பொழுது கியாதிவான்களாக விளங்குகின்றார்கள்.

ஒருவன் அகாலத்தில் கிளம்பி ரெயிலை விட்டுவிட்டால் போக வேண்டிய காரியம் நஷ்டமாவதற்கு நிரம்பவும் வருத்தப்படுகிறான். லோகக்ஷேமார்த்தமாக அவசியம் செய்யப்படவேண்டிய ஸந்தியா வந்தனக் கடமையை விடுவதில், அவ்வளவு தூரம் வருத்தம் உண்டாகாமல் இருப்பது எவ்வளவு பேதமை!

காயத்ரீ மந்திரத்தை, சொல்லப்பட்டிருக்கும் ஸங்க்யை குறைவுபடாமலும், ஸௌகர்யப்படுகிறவரையில் அதற்கு அதிகமாகவும், ப்ரதி தினமும் சரியான காலத்தில் மனம் சலிக்காமல் ஜபிக்கவேண்டும். இந்த மந்திரம் மிகவும் உத்க்ருஷ்டமானது. எவனொருவன் சிரத்தையுடனும் பக்தியுடனும் இந்த மந்திரத்தை தியானபூர்வமாய் ஜபித்து வருகிறானோ, அவனுடைய பக்தி சிரத்தையை அனுசரித்து அதே ஜன்மாவிலோ

அல்லது தொடர்ந்துவரும் ஜன்மாக்களொன்றிலோ, அவனே அந்த ஸௌரமண்டல ரூபியான ஸூர்யனாகி (ஸூர்ய பகவானே ஸ்ரீமந்நாராயணன், அவரே பரமேஶ்வரன், அவரே எல்லா மூர்த்திகளின் தோற்றம்) மோக்ஷத்தை அடைகிறான்.

ஸந்தியாவந்தனத்தின் மஹிமையைப் பற்றி ஒரு கதை இருக்கின்றது. சுமார் 500, 600 வருடங்களுக்கு முன் நடந்ததாக ஊகிக்க முடிகின்றது. சென்னை கவர்மெண்ட்டைச் சேர்ந்த ஆர்க்கியாலாஜிகள் டிபார்ட்மெண்டார் பிரசுரித்திருக்கும் ரிகார்டில் இந்த கதைக்கு ஆதாரங்கள் இருக்கின்றன.

திருவனந்தபுரத்தை ஆண்ட ராஜாக்களில் ஒருவர், எள்ளினால் ஒரு காலபுருஷன் உருவத்தைச் செய்து, அதனுள் ஏராள ஐஶ்வர்யத்தை வைத்து, அந்த உருவத்தைத் தானம் செய்யப் போவதாக விளம்பரம் செய்தார். அந்த உருவத்திற்குள்ளிருக்கும் பொருளைக் கருதி அநேகர் தானம் வாங்க வந்தார்கள். அந்த காலபுருஷன் உருவம் கேட்ட கேள்விகளுக்குத் தக்க பதில் சொல்லமுடியாமல் தானம் வாங்க வந்தவர்களெல்லாம் மரணமுற்றார்கள்.

கன்னடியர் என்ற ஒரு ப்ராஹ்மணர் இருந்தார். ஸந்தியாவந்தன கர்மாவில் வெகு சிரத்தையுள்ளவர். ஶாஸ்திரங்கள் முதலானவைகளில் அவருக்கு அப்யாஸம் கிடையாது. அந்த தானத்தை வாங்க அவர் வந்தார். காலபுருஷன் உருவம் மூன்று விரல்களைக் காட்டியது. அதற்கு கன்னடியர் முடியாதென்றார். அடுத்ததாக இரண்டு விரல்களைக் காட்டியது. அதற்கும் முடியாதென்றார். கடைசியாக ஏகவிரலைக் காட்டியது. சரி என்றார். தான் ஒன்றும் செய்யமுடியாததைக் கண்டு காலபுருஷன் அந்த உருவத்தினின்றும் மறைந்தான். அதை அந்த ப்ராஹ்மணர் வாங்கிக்கொண்டார்.

மூன்று விரல்கள் என்பது, மூன்று வேளைகளில் செய்யப்படும் ஸந்தியா வந்தனத்தின் பலன். இரண்டு விரல்கள் காலை, மாலை இருவேளைகளின் ஸந்தியாவந்தனத்தின் பலன். ஒருவிரல் ஒரு வேளை அதாவது மாத்யாந்நிகத்தின் பலன் என்பது காலபுருஷன் உருவம்கேட்ட கேள்விகளின் அர்த்தம்.

ஸந்தியாவந்தனத்தின் ஒரு வேளையின் பலனைக் கொடுத்ததன் மூலமும், ஐஶ்வர்யத்தைத் தானம் வாங்கியதன் மூலமும் ப்ராஹமணருக்குப் பாபம் ஸம்பவித்துவிட்டது. அந்த பாபத்தைப் போக்கிக்கொள்ள



வேண்டிய வழியைத் தெரிந்துகொள்ள அகத்திய முனிவர் தவம் செய்து கொண்டிருப்பதாக சொல்லப்படும் மலைச்சாரலுக்குச் சென்றார். போகும்முன் தம்மிடமிருந்த தனத்தைப் பாதுகாக்கும்படி கோயில்பூஜை செய்து வந்த ஒரு குருக்களிடம் ஒப்படைத்தார். எங்கே சென்றாலும் அகத்திய முனிவர் காணப்படவில்லை.

முனிவரைக் காணாமையினால் அவர் ஏக்கமுற்றிருக்கும் ஸமயத்தில், அகத்திய முனிவர் ஓர் கிழ வடிவத்துடன் ப்ராஹ்மணர் முன் தோன்றினார். ''ஒரு பசு மாடு உமக்குத் தென்படும். அந்த இடத்திலிருந்து ஒரு கால்வாய் வெட்ட ஆரம்பிக்கவேண்டும். பசுமாடு எவ்வளவு தூரம் சென்று நிற்கின்றதோ, அவ்வளவு தூரத்திற்கு கால்வாய் வெட்ட வேண்டும். நடுவில் பசுமாடு எந்த இடங்களில் சாணம் போட்டு மூத்திரம் பெய்கிறதோ அந்த இடங்களில், சாணி போட்ட இடத்தில் மடை அமைக்கவும். மூத்திரம் பெய்த இடத்தில் வாய்க்கால் வெட்டவேண்டும். இவ்விதம் செய்தால் உமக்கு ஏற்பட்டிருக்கும் பாபம் போய்விடும்'' என்று கிழவர் சொன்னார். அவ்விதம் செய்யத் தீர்மானித்துக்கொண்டு திரவியத்தைத் திரும்ப வாங்குவதற்காகக் குருக்களிடம் சென்றார். குருக்களுக்கு ப்ராஹ்மணனின் தனத்திடம் மோகம் ஏற்பட்டுவிட்டது.

அந்தக் காலத்துப் பவுன், இளம் துவரம்பருப்பை ஒத்திருக்குமாதலால் குருக்கள் ப்ராஹ்மணரிடம் துவரம் பருப்புகளைக் கொடுத்து, ''நீர் கொடுத்த, திரவியம் இதுதான். எடுத்துக்கொள்ளும்'' என்றார். குருக்களின் வஞ்சகச் செயலை அறிந்தவராகி, ப்ராஹ்மணர், குருக்களை எவ்வளவு ப்ரார்த்தித்தாலும் பயன் ஏற்படாததைக் கண்டு ராஜாவிடம் சென்று முறையிட்டுக்கொண்டார். குருக்களும் தருவிக்கப்பட்டார். குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. தாம் பூஜை செய்யும் லிங்கத்தைக் கட்டிக்கொண்டு குருக்கள் ப்ரமாணம் செய்தால் தாம் ஒப்புக் கொள்வதாக ப்ராஹ்மணர் கேட்டுக்கொண்டார். அவ்விதமே செய்ய குருக்களும் ஸம்மதித்துவிட்டார். குருக்கள் ஆபிசார ப்ரயோகத்தில் தேர்ந்தவராதலால் லிங்கத்திலுள்ள சுவாமியைப் பக்கத்திலுள்ள மரத்தில் ஆகர்ஷணம் செய்துவிட்டார்.

ஸ்வாமி, ப்ராஹ்மணர் சொப்பனத்தில் தோன்றி நடந்தவற்றைச் சொல்லிவிட்டார். ப்ராஹ்மணர் மறுபடியும் ராஜாவிடம் சென்று, மரத்தைக் கட்டிக்கொண்டு ப்ரமாணம் செய்யும்படி வேணுமாக கேட்டுக் கொண்டார். குருக்கள் மறுதளித்தும் பயன்அளிக்கவில்லை. குருக்கள் மரத்தைக் கட்டிக்

கொண்டு ப்ரமாணம் செய்தார். உடல் எரிந்து போய்விட்டது. திருநெல்வேலி ஜில்லாவில் இந்த கோவில் உள்ளது. ''எரிச்சுக்கட்டி சுவாமி' என்பது ஆலய மூர்த்தியின் பெயர். பிறகு ப்ராஹ்மணர் தன் தனத்தை எடுத்துக்கொண்டு, கிழவர் சொல்லியபடி பசுமாட்டைக் கண்டு கால்வாய் வெட்டினார். ''கன்னடியன் கால்வாய்'' என்பது அதன் பெயர். இன்றும் இது திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கிறது. அந்தக் கால்வாயின் ப்ரதேசங்கள் நாளைக்கும் செழித்திருக்கின்றன. இந்த கதையினால் ஸந்தியாவந்தனத்தின் பெருமை நன்கு விளங்கும். எனவே ஸந்தியாவந்தனம் ஒரு கடமை. அது செய்வதனால் உலகக்ஷேமம் ஏற்படுகின்றது. சிரத்தையுடன் செய்தால் மோக்ஷம் லபிக்கின்றது. ■

---

உத்தம குருவிடமிருந்து காயத்ரீ மந்த்ரம் உபதேஸம் பெற்ற ஒரு சீடன், தனக்கு ஸந்யாஸம் பெறுவதற்கு பூர்ண யோக்யதை இருந்தும் ஸந்யாஸ ஆஶ்ரமம் வாங்கிக்கொள்ளவில்லை. அதற்கு என்ன காரணம் என்று அவரை ஒரு ஸாது வினவினார்.

''ஸந்யாஸம் வாங்கிக் கொண்டால் காயத்ரீ மந்த்ரத்தை ஜபிக்கலாகாது என்பது விதி. குரு உபதேஸம் செய்த மந்த்ரத்தை ஜபிக்க முடியாமல் செய்யும் ஆஶ்ரமம் எத்தகைய உயர்ந்ததாக இருந்தாலும் எனக்கு அது தேவையில்லை'' என்று பதிலுரைத்தார்.

- ஸ்ரீ ஸ்வாமிகள்

---

பின் அட்டைப்படம் :

சென்னை ப்ரேமிகபவனத்தில், ஸமீபத்தில் ஆடிப்பூரம் அன்று இரவு 7½ மணியளவில் நடைபெற்ற மதுரை ஸ்ரீ T.N. சேஷகோபாலன் அவர்களின் கர்நாடக ஸங்கீத கச்சேரி.

# எந்தரோ மஹானுபாவுலு - 28

நிமாயிக்கு யஜ்ஞோபவீத ஸம்ஸ்காரம் செய்து வைப்பதற்காக மிச்ராஜியின் க்ருஹத்தில் தடபுடலான ஏற்பாடுகள் நடந்தன. கல்யாண வீடு போல் அலங்கரிக்கப்பட்ட வீட்டில் முற்றத்தில் உள்ள மண்டபத்தில் ப்ராஹ்மண வித்வான்கள், மிச்ராஜியின் உறவினர்கள் அனைவரும் அமர்ந்திருந்தனர். நிமாயிக்கு வபனம் செய்து முகூர்த்த ஸமயத்தில் மண்டபத்திற்கு அழைத்து வந்தனர். ஆசார்யர் நிமாயிக்கு மஞ்சள் பட்டாடை அணிவித்து கையில் பலாச தண்டத்தைக் கொடுத்தார். அவரது தங்கமயமான சரீரத்தில் மஞ்சள் வஸ்த்ரம் மிக நேர்த்தியாக இருந்தது. அழகாக தகப்பனாருக்கு அருகில் அமர்ந்து நிமாயி ஸமிதாதானம் செய்தான். பிறகு பட்டு வஸ்த்ரம் போர்த்தி நிமாயிக்கு காதில் காயத்ரீ மந்த்ரத்தை மிச்ராஜி உபதேசம் செய்தார்.

மந்திரத்தை ஶ்ரவணம் செய்த மறுக்ஷணம் நிமாயி **பா**வமக்னமானார். உடனே பெருத்த குரலில் ஒரு ஹுங்காரம் செய்துவிட்டு பூமியில் மூர்ச்சையாகி அசேதனமாய் விழுந்தார். கையிலிருந்த தண்டம் ஒரு மூலையில் விழுந்தது. இரு கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகிய வண்ணம் இருந்தது. ப்ராண ஸஞ்சாரம் மிகவும் மெதுவாக இருந்தது. இவரது இந்த நிலையைக் கண்டு அனைவரும் மிகவும் பதறிப் போய்விட்டனர். மிச்ராஜி, நிமாயியின் முகத்தில் ஜலத்தைத் தெளித்தார். சிலர் விசிறினார்கள். கொஞ்சம் கொஞ்சமாக நிமாயிக்கு நினைவு திரும்பியது. கண் விழித்து நினைவு வந்ததும் நிமாயி, தந்தையைப் பார்த்து, ''அப்பா! நான் இப்போது என்ன செய்யவேண்டும்'' எனக் கேட்டார். அவரது முகத்தில் ஒரு அபூர்வமான தேஜஸ் குடிகொண்டு இருந்தது.

ப்ரஹ்மசாரி பிக்ஷை எடுத்து ஜீவிக்க வேண்டுமாதலால் இன்றும் உபநயன தினத்தன்று பிக்ஷை எடுப்பது என்பதை வழக்கமாக வைத்துக் கொண்டுள்ளோம். மிச்ராஜியும் நிமாயியை பிக்ஷை எடுப்பதற்குத் தயார் செய்தார். அவனிடம் தண்டமும் ஒரு பையும் தந்து, ''பவதி பிக்ஷாம் தேஹி'' என முதலில் அன்னையிடமும், பிறகு மற்ற ஸ்த்ரீகளிடமும் சென்று பிக்ஷை எடுத்து வருமாறும் சொல்லித் தந்தார். வாமன ரூபத்தில் நிமாயியின் அழகைக் கண்ட அனைவரும் மனம் மயங்கி அவனுக்குத் தங்கள் சக்திக்கு மீறி திரவியங்களை அளித்தனர்.

இந்த ஸமயத்தில் திடீரென்று ஒரு வயோதிக ப்ராஹ்மணர் தடியை ஊன்றிக்கொண்டு நடந்து உபநயன மண்டபத்துக்கு வந்தார். நிமாயியை கண் ஜாடையால் தன் அருகில் அழைத்து அவனது பையில் தனது நடுங்கும் கரங்களால் ஒரு பாக்குக்கொட்டையைப் போட்டு விட்டுச் சென்றார். நிமாயி உடனே அந்த பாக்கை பையிலிருந்து எடுத்து தன் வாயில் போட்டுக்கொண்டுவிட்டான். பாக்கை சாப்பிட்டதும் அவனது நிலைமை விசித்திரமானதாக ஆகியது. ஒரு **பா**வாவேசம் போல வந்து தன்னை மறந்து தன் அன்னையை அழைத்து ஆணையிட்டார்.

''அம்மா! இன்றிலிருந்து இனி நீ ஏகாதஶீ அன்று அன்னம் ஒருபோதும் உண்ணக்கூடாது'' என்றார். அன்னைக்கும், தன்னை மறந்த ஒரு பரவச நிலை ஏற்பட்டது. தனது சிறிய பாலகன் பேசுகிறான் என்பதை மறந்தாள். யாரோ ஒரு மஹா புருஷர் தனக்கு ஆணையிடுகிறார் என்று உணர்ந்தாள். உடனே ''அப்படியே, தங்கள் உத்தரவுப்படியே, இனி ஹரிவாஸரத்தன்று அன்னம் உண்ணமாட்டேன்'' என்று பதிலுரைத்தாள். சிறிது நேரத்தில், ''சரி, நான் வருகிறேன். உன் புத்திரனை நன்றாக ரக்ஷித்துக் கொள்'' என்று கூறி மறுபடி நிமாயி மூர்ச்சையானான்.

சிறிது நேரங்கழித்து படபடவென்று தன் பெரிய சிவந்த விழிகளைத் திறந்து உறக்கத்திலிருந்து விழித்தாற்போல சுற்றும் முற்றும் பார்த்தான் நிமாயி. அனைவரும் ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டிருக்கையில் மிச்ராஜி, ''நிமாயி! உனக்கு என்ன ஆயிற்று, ஏன் இப்படி விசித்திரமாக நடந்துகொள்கிறாய்'' என்று கேட்டார். நிமாயி, ''எனக்கு என்ன ஆயிற்று என்று எனக்கும் புரியவில்லை அப்பா. ஏதோ தூக்கம்போல் இருந்தது'' என்றான். கூடியிருந்தவர்கள் அவனது ஆவேச நிலையைப் பற்றி விதம்விதமாக தர்க்கம் செய்தனர். சிலர் பூத பிசாசு ஆவேசமாக இருக்கும் என்றனர். பக்தர்கள், ''இது ஸாக்ஷாத் ஹரியின் ஆவேசம்தான்'' என்றனர். இப்படி உபநயனத்தன்று நிமாயிக்கு, ''கௌர் ஹரி'' என்று பெயர் ஏற்பட்டது.

உபநயனத்திற்குப் பிறகு நிமாயி ஆசார்ய ஸுதர்ஸன் என்பவரிடமும் விஷ்ணு பண்டிட் என்பவரிடமும் படிப்பதற்காகச் சென்றான். மிகவும் மேதாவியாக இருந்த நிமாயிக்கு எந்தப் பாடமும் ஆசார்யர் ஒரு முறை சொன்னால் போதும். திரும்பிச் சொல்லவேண்டிய அவசியமே இராது. இதனால் அத்யாபகர்கள் நிமாயியிடம் மிகவும் ப்ரேமையுடனிருந்தனர். சிறிது காலத்திற்குப் பிறகு கங்காதரர் எனும் பண்டிதரிடம் வ்யாகரணம் படிக்கச் சென்றார். புத்திரனின் புத்தி கூர்மையைக் கண்டு மிச்ராஜி ஆனந்தம் அடைந்தார்.

நிமாயிக்கு பதினோரு வயதாகியது. ஒரு நாள், பாடசாலைக்குப் புறப்படும்போது தந்தை ஜுரத்தால் தவிப்பதைக் கண்டு கவலையுற்று அவருக்கு சிசுருக்ஷை செய்ய நிமாயி ஆரம்பித்தான். தந்தையோ, ''நீ பாடசாலைக்குப் போ; எனக்கு ஒன்றுமில்லை'' என்றார். உடனே நிமாயி, ''அப்பா, உங்களுக்கு உடம்பு சரியாகும் வரை நான் படிக்கப் போவதில்லை'' என்றான். ஆனால், மிச்ராஜின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமாகியது. ஜுரம் இறங்கவே இல்லை. தனது இறுதிகாலம் வந்துவிட்டது என அவருக்கு ஞானம் உண்டாகியது. உடனே அவர் சசீதேவியிடம், ''நான் இனி ஜீவித்திருக்க மாட்டேன். நிமாயியை நன்றாக கவனித்துக் கொள்'' என்றார்.

சசீமாதா விக்கி விக்கி அழத்தொடங்கினாள். நிமாயியும் வருத்தமுற்றான். அவன், தன் தந்தையை கட்டிலிலிருந்து கீழே இறங்குமாறு சொன்னான். மிச்ராஜியை தர்ப்பாசனத்தில் படுத்துக் கொள்ளச் செய்தான். மிச்ராஜி, தன்னை கங்கைக் கரைக்கு அழைத்துச் செல்லச் சொன்னார். பதினோரு வயது பாலகனான நிமாயி ஒருவரையும் அனுமதிக்காது தான் ஒருவனாகவே தன் தந்தையை தாயின் உதவியோடு கங்கை கரைக்கு அழைத்துச்சென்றான்.

தனது சக்தியற்ற கையால் மெதுவாக நிமாயியின் சிரத்தைத் தடவி அவனது சிரத்தை தன் மார்பில் வைத்துக்கொண்டு மிச்ராஜி க்ஷீணமான குரலில், ''நிமாயி, உன்னை நான் பகவான் விஶ்வம்பரனிடம் ஒப்படைக்கிறேன். அவர் உன்னைக் காப்பாற்றுவார்'' என்று கூறி கங்கைக் கரையில் தனது உயிரை விட்டார். சசீமாதா புலம்பிக்கொண்டே பெரிதாக அழுதாள். நிமாயிக்கும் தந்தையின் மரணத்தால் மிகவும் துயரம் ஏற்பட்டது. ஆனால் தைரியத்துடன் விதிப்படி தந்தைக்கு அந்திம கிரியைகள் செய்தான். அன்னையிடம், ''அம்மா, மரணம் அனைவருக்கும் ஒருநாள் வரத்தான் வரும். நமது வாழ்க்கையில் பிதாவுடனான வாழ்வு முடிந்துவிட்டது. நீ வருந்தாதே. நான் உன்னை நன்றாக கவனித்துக் கொள்வேன்'' என்று கூறி தேற்றினான். சசீமாதாவும் சிறிது சிறிதாக மனம் தைர்யமடைந்தாள்.

நிமாயி மிகவும் புத்தி கூர்மையுடையவனாக இருந்தான். மேலும், குறும்பும், அனைவருடனும் கலகலவென்று சிரித்துப் பழகும் ஸ்வபாவமும், கவர்ந்திழுக்கும் ஸௌந்தர்யமும் கலந்த நிமாயியை சிறுவர், பெரியவர், வித்யார்த்திகள், அத்யாபகர்கள் அனைவருக்கும் மிகவும் பிடித்திருந்தது.

எப்பொழும் மத்தாப்பூ போல் ஹாஸ்யம் அவனுக்கு ஸஹஜமாக வரும். மிகவும் இரைந்து சிரித்து சிரித்து பேசுவான். அனைவரையும் சிரிக்க வைப்பான்.

பண்டிதர் கங்காதரர் பாடசாலையில் மிகவும் வயதுடைய வித்யார்த்திகளும் அத்யயனம் செய்துகொண்டிருந்தார்கள். பதிமூன்று வயது நிரம்பிய நிமாயி, 30 - 40 வயதான வித்யார்த்திகளை வம்புக்கு இழுத்து சீண்டுவான்.

ப்ரஸித்திபெற்ற கவி முராரிகுப்தா, கமலாகாந்தர், தந்த்ரசாஸ்திர பண்டிதர், க்ருஷ்ணானந்தர் ஆகியோர் அப்பொழுது பாடசாலையில் படித்துக்கொண்டிருந்தனர். நிமாயிக்கு சிறியவர் பெரியவர் யாரிடமும் ஸங்கோஜம் கிடையாது. எப்படியாவது யாரிடமாவது சீண்டிக்கொண்டே வாதவிவாதம் செய்வான். விசேஷமாக வைஷ்ணவ வித்யார்த்திகளை மிகவும் வம்புக்கிழுத்து அவர்களைக் கேலி செய்து வெட்கத்திலாழ்த்துவான்.

முராரிகுப்தா வயதில் மிகவும் பெரியவர். ஆனாலும் நிமாயி அவரை வம்புக்கிழுப்பான். அவரும், நிமாயி பாலகன்தானே என்று பொறுமையாக இருப்பார். சிறிது காலத்திலேயே நிமாயியின் விலக்ஷணமான புத்தி சாதுர்யம் அவருக்குப் புலப்படவே அவனுடன் ஸ்வாரஸ்யமாக அவரும் ஸம்பாஷணை செய்வார். வேண்டுமென்றே நிமாயி ஒரு ஸமயம், ''முராரி, இந்த ப்ரயோகத்தை ஸித்தாந்தம் செய்து காட்டு'' என்பான். அவரும் அதை அழகாக நிரூபிப்பார். எப்படியாவது நிமாயி அதில் சில தோஷங்களை எடுத்துக் கூறி அவரை வியப்பில் ஆழ்த்துவான். நிமாயியின் தர்க்க சாதுர்யத்தைக் கண்டு அவர் ஆனந்தப்படுவார்.

குப்தா வைத்ய ஶாஸ்த்திரம் அறிந்தவர். ஆதலால் நிமாயி சிரித்துக் கொண்டே, ''குப்தாஜி! நீங்களோ வைத்யர். பண்டிதர்களுக்குத்தான் ப்ரயோகங்கள் நிரூபணம் செய்யும் வேலை. நீங்கள் வேரையும் கிழங்கையும் அரைத்து மருந்து உருண்டைகள் செய்யக் கற்றுக் கொள்ளுங்கள். நாடியைப் பாருங்கள், ரோகி இருந்தால் என்ன? செத்தால் என்ன?'' என்பான். பிறகு, ''வைத்யராஜ நமஸ்துப்யம் யமராஜ ஸஹோதர! யமஸ்து ஹரதே ப்ராணான், த்வம்து ப்ராணான் தனானி ச'' என்று கூறி சிரிப்பான். அதாவது ''வைத்யரே உமக்கு நமஸ்காரம். நீங்கள் யமராஜனுக்கு ஸஹோதரர், யமன் ப்ராணனை மட்டும்தான் திருடிக் கொள்கிறான். நீங்களோ ப்ராணனுடன் தனத்தையும் சேர்த்து எடுத்துக் கொள்கிறீர்கள்'' என்று அர்த்தம்.

முராரிக்கு இதைக் கேட்டதும் மனதில் வெட்கமடைந்தாலும் வெளியில் சிரித்துக்கொண்டே இருப்பார். அவர் முகம் மிகவும் வாடினால் உடனே நிமாயி தனது கரத்தை அவர் மீது அன்புடன் வைப்பான். மிருதுவான நிமாயியின் கரஸ்பர்சம் பட்டதுமே முராரிகுப்தா குளிர்ந்து கோபம் தணிந்து போய்விடுவார்.

வாதத்தில் நிமாயியை யாராலும் வெல்ல முடியாது. யாரையாவது கூப்பிட்டு கூப்பிட்டு வம்புக்கிழுப்பான். எந்த விஷயத்தையும் அவனே முதலில் கண்டனம் செய்வான். பிறகு யுக்தியால் அதை மாற்றி ஸமாதானமும் செய்வான். இவனது வாக் சாதுர்யத்தைக் கண்டு அனைவரும் வாயைப் பிளந்தபடி கேட்டுக்கொண்டிருப்பார்கள். அவனிடம் தோற்றுப்போகாத வித்யார்த்திகளே கிடையாது. கங்கைக் கரையில் எப்பொழுதும் நிமாயி வாத விவாதம் செய்து கொண்டிருப்பான்.

அந்த நாட்களில், வ்யாகரணத்திற்கு இப்பொழுதுபோல் புத்தகங்கள் கிடையாது. பரஸ்பரம் ஸம்பாஷித்துக்கொண்டே மனனம் செய்வார்கள். நிமாயி எப்பேர்ப்பட்ட கடினமான வ்யாகரண பாடங்களையும் சுலபமாகவும் ஸ்வாரஸ்யமாகவும் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி புரிய வைப்பான். இதனால் சிறிய வயதானவனானாலும் அவனை எல்லோரும் ஒரு குருவைப் போல் அண்டி பாடம் கேட்பார்கள்.

''பஞ்சடீகா'' என்ற வ்யாகரண க்ரந்தத்தை நிமாயி சிறிய வயதிலேயே முழுதும் படித்து முடித்துவிட்டதால் அந்த க்ரந்தத்துக்கு அவனே ஒரு வ்யாக்யானமும் எழுதிவிட்டான். இது ஸரளமாக இருக்கவே மாணவர்களிடையே மிகவும் ப்ரபலமாகிவிட்டது. பெரிய பெரிய வித்வான்களும் பண்டிதர்களும் இந்த வ்யாக்யானத்தைப் படித்துவிட்டு மனம் திறந்து பாராட்டினார்கள். நவத்வீபத்துக்கு வெளியில் அநேக ப்ரதேசங்களில் இந்த வ்யாக்யான புத்தகம் ப்ரபலமடைந்தது.

அந்த நாட்களில் வாஸுதேவ ஸார்வபௌமர் என்கிற வ்யாகரண பண்டிதர் ந்யாய ஶாஸ்த்திரத்தில் மன்னர் என்று ப்ரஸித்தி அடைந்திருந்தார். அவரது பாடசாலைதான் ந்யாய ஶாஸ்த்திரத்தில் ஶ்ரேஷ்டமானது எனக் கருதப்பட்டது. இன்றுவரை அங்கு படித்தவர்கள் உலகப் ப்ரசித்தி பெற்றவர்களாக உள்ளனர். நிமாயியும் அங்கு ந்யாயம் படிக்கச் சென்றார். ''தீதிதி'' என்ற ப்ரஸித்தி பெற்ற ந்யாயக்ரந்தத்தை பிற்காலத்தில் இயற்றிய ரகுநாத்ஜி என்ற பண்டிதரும் அப்போது அங்கு ந்யாயம் படித்துக்கொண்டிருந்தார். ரகுநாதரும் நிமாயியும் பரஸ்பரம்



அன்புடன் பழகலானார்கள். சிறிது காலத்திற்குள் ரகுநாத்ஜிக்கு நிமாயியின் புத்தி கூர்மை நன்றாக விளங்கியது. ந்யாயத்தில் தனக்கு நிகர் யாரும் கிடையாது என்று இருந்த ரகுநாத்ஜிக்கு நிமாயி தன்னையும் மிஞ்சிவிடுவான் எனத் தெரிந்தது. இருந்தும் தனது புத்தியின் பலத்தில் அவருக்கு நம்பிக்கை இருந்ததால் இது பற்றி கவலை அடையவில்லை.

ஒரு நாள் ஆசார்யர் ரகுநாத்திடம் ஒரு பங்க்த்தியை அமைக்குமாறு கூறினார். இது அவருக்கு சரியாக வரவில்லை. நாள் முழுவதும் அது பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தார். வெகுநேரம் கழித்து அவருக்கு அது பற்றி விளங்கி நேரே தனது குருவிடம் சென்று விடையைக் கூறிவிட்டு வீட்டுக்கு வந்து உணவு தயாரிக்க ஆரம்பித்தார்.

அப்பொழுது நிமாயி, அங்கு வந்தான். ''பண்டிட் மஹராஜ்! இன்று ஏன் அகாலத்தில் உணவு தயாரிக்கிறீர்கள்'' என்றான். ரகுநாத்ஜி, ''என்ன செய்ய? ஆசார்யர் என்னிடம் ஒரு பங்க்த்தியை அமைக்குமாறு கூறினார். அது பற்றி யோசித்து யோசித்து இப்போதுதான் குருவிடம் போய் விடையைச் சொல்லிவிட்டு வருகிறேன். அதுதான் உணவு தயாரிக்க தாமதம்'' என்றார். ''அப்படியா! அது என்ன பங்க்த்தி'' என்றான் நிமாயி. ரகுநாத்ஜி அதைப் பற்றி சொன்னதும், சிரித்துக்கொண்டே நிமாயி, ''இந்தச் சிறிய பங்க்த்திக்கா இத்தனை ஶ்ரமம்'' என்றான்.

ரகுநாத்ஜி சிறிது ஆவேசத்துடன், ''அப்படியென்றால் நீயே இதை அமைத்துச் சொல்லேன்'' என்றார். ஒரு கஷ்டமும் இல்லாமல் நிமாயி, உடனே அந்த பங்க்த்தியை அமைத்து அதற்கான ஸந்தேகங்களை எழுப்பி அதற்கு ஸமாதானத்தையும் எடுத்துச் சொன்னான். ரகுநாத்தின் முகம் வாடிவிட்டது. வெளியில் நிமாயியை புகழ்ந்தான். மனதில் வேதனைதான் மிஞ்சியது. அவனுக்கு உணவு ருசிக்கவில்லை.

அந்த ஸமயத்தில்தான் ரகுநாத்ஜி, ''தீதிதீ'' என்ற ந்யாயஶாஸ்த்திர க்ரந்தத்தை தயாரித்துக்கொண்டிருந்தார். நிமாயியும் இந்த விஷயத்தில் புத்தகம் எழுதுகிறான் என்று தெரிந்துகொண்டு ரகுநாத், நிமாயியிடம், ''நீ எழுதும் புத்தகத்தை எனக்குக் காண்பியேன்'' என்றார். நிமாயி சிரித்துக் கொண்டே, ''ந்யாயம் போன்ற கடினமான விஷயத்தில் புத்தகம் எழுதுவது உன் போன்ற பண்டிதர்களின் வேலை. நான் ஏதோ விளையாட்டாக எழுதுகிறேன். நீ அதைப் பார்க்க விரும்புவது என்னுடைய பாக்யம் தான். நாளை கொண்டு வருகிறேன்'' என்றான்.

அடுத்த நாள் நிமாயி தான் எழுதிய புத்தகத்துடன் பாடசாலைக்கு வந்தான். பாடசாலை விட்டு வீடு திரும்பும்போது படகில் ரகுநாத்ஜிக்கு தன்னுடைய க்ரந்தத்தைப் படித்துக் காண்பித்துக்கொண்டே வந்தான்.

அதைக் கேட்க கேட்க ரகுநாத்துக்கு மனவேதனை மிகுந்தது. சிறிது நேரத்தில் தேம்பித்தேம்பி அழ ஆரம்பித்தார். உற்சாகமாக படித்துக் கொண்டே வந்த நிமாயிக்கு இது பற்றித் தெரியவில்லை. நடுவில் ஒரு முறை கண்ணை உயர்த்தி ரகுநாத்தைப் பார்த்தான் நிமாயி. அவரது நிலைமையைக் கண்டு பதறிப்போய், ''அண்ணா! இது என்ன? உங்களுக்கு என்ன ஆயிற்று?'' என்றான்.

கண்களைத் துடைத்துக்கொண்டே ரகுநாத் தழுதழுத்த குரலில், ''நிமாயி, உன்னிடம் என் எண்ணத்தை மறைத்து நான் பாபம் செய்ய விரும்பவில்லை. உண்மை என்னவென்றால், ந்யாய ஶாஸ்த்திரத்தில் ஸர்வ ஶ்ரேஷ்டமான க்ரந்தமாக இருக்கவேண்டும் என்ற அபிலாஷையுடன் நான் எனது க்ரந்தத்தை எழுதுகிறேன். ஆனால், உனது க்ரந்தத்தின் முன்னால் என் புத்தகத்தை யார் சீண்டுவார்கள். இந்த வேதனையால்தான் நான் அடக்க முடியாமல் அழுதேன்'' என்றார்.

இதைக் கேட்டு நிமாயி, உரத்த குரலில் கடகடவென்று சிரித்து அவரை அன்புடன் ஸ்பர்சித்துவிட்டு கூறலானார். ''இந்தச் சின்னச் விஷயத்திற்காகவா மனது வருத்தப்படுவது? இது ஒரு ஸாதாரண புத்தகம்தானே. உங்களது ஸந்தோஷத்திற்காக நான் அக்னியில் குதித்து ப்ராணனைக் கூட விடுவேனே! இந்த புத்தகம் உங்களுக்கு மன வருத்தத்தைத் தருகிறது என்றால் இதை இப்போதே அழித்துவிடுகிறேன்'' இப்படிச் சொல்லிவிட்டு, நிமாயி, மிகவும் ப்ரயாசைப்பட்டு கைப்பட எழுதிய புத்தகத்தை கங்கையின் ப்ரவாஹத்தில் வீசி எறிந்தார். ஜான்ஹவியின் அலைகளில் அந்த க்ரந்தம் மிதந்து ஆடிச்சென்றது. நிமாயியின் த்யாகத்தால் ஆனந்தம் அடைந்து அப்படி ஆடியதோ!

ரகுநாத்ஜி நிமாயியை ஆனந்தத்தால் இறுகக் கட்டித் தழுவிக் கொண்டு நாத்தழுதழுக்க, ''நிமாயி, இப்படி அஸாத்யமான த்யாகத்தை உன்னால்தான் செய்யமுடியும். புகழைப் புல்லாக மதித்து திரஸ்காரம் செய்ய மஹான்களால்தான் முடியும். நானோ புகழை விரும்பும் அற்பப்புழு. எனது புத்தகத்தை விட உன் த்யாகம் லக்ஷம் மடங்கு அதிக புகழைப் பெறப்போகிறது'' என்று கூறினார்.

அன்றிலிருந்தே நிமாயி ந்யாயம் படிப்பதையும் ந்யாய பாடசாலை செல்வதையும் நிறுத்திவிட்டார். வீட்டிலேயே தனது அண்ணனும், தந்தையும் சேகரித்து வைத்திருந்த புத்தகங்களைத் தானாகவே படித்துக் கொள்ள ஆரம்பித்தார்.

(தொடரும்)

- ஜயந்தி ஜானகிராமன்

# ஜ்யோதிஷம் - 7

- ஸ்ரீ ஸ்வாமிகள்

அஷ்டமங்கல ப்ரஸ்னத்தின் மூலம் மிகவும் தெளிவாக பல தலைமுறை விஷயங்களையும், நடக்கப்போகிற விஷயங்களையும் துல்லியமாகக் கூறமுடியும். அஷ்டமங்கல ப்ரஸ்ணம் பார்க்க ஆரம்பிக்கும் ஸமயத்தில், ஓரிடத்தில் புஸ்தகம், தீபம், நெய், வஸ்த்ரம், ஸ்வர்ணம், தாம்பூலம், கண்ணாடி, புஷ்பம் இவைகளைக் க்ரமப்படி வைக்கவேண்டும்.

ஓர் சுத்தமான இடத்தை கோமியத்தினால் மெழுகி, புண்யாவசனம் செய்து, அவரவருடைய உபாஸனா தேவதையை ஸ்மரித்து, மேஷம் முதல் மீனம் வரையிலான ராசி சக்கரத்தை வரைந்து, அந்தந்த ராசி அதிபதியான க்ரஹங்களை ஆவாஹனம் செய்து, பூஜை செய்ய வேண்டும். யார் பொருட்டு ப்ரஸ்ணம் பார்க்கப்படுகிறதோ அவரை ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எட்டு மங்கலப் பொருட்களிலிருந்து அவரது விருப்பப்படி ஒரு பொருளை எடுத்துவரச் செய்யவேண்டும்.

அதன்பின் ஒரு ப்ராஹ்மண கன்யா குழந்தையை வேதியின் முன் நிற்கச் செய்யவேண்டும். பிறகு, அந்தப் பெண் நிற்குமிடத்திலிருந்து சிறிது நகர்ந்து நிற்கச் செய்யவேண்டும். மேலும் அந்தப் பெண்ணின் உடலில் ஏதேனும் ஓர் அவயத்தை அந்த பெண்ணைத் தொடச் செய்யவேண்டும். அந்தப் பெண் நகரும் திசையும், தொடும் அவயமும் பலன் சொல்லும் பொழுது கணக்கில் கொள்ளப்பட வேண்டியன. லக்னத்தைத் தீர்மானிக்க, ஒரு ஸ்வர்ணக் காசைப் பூஜை செய்து புஷ்பங்களுக்கு நடுவே வைத்து, அந்தக் குழந்தையிடம் கொடுத்து, தெய்வத்தை நினைத்துக்கொண்டே ஒரு கட்டத்தில் போடச் சொல்ல வேண்டும். ஸ்வர்ணம் மேல்முகமாக (Head side) வீழ்ந்தால் வளர்ச்சியையும், கீழ்முகமாக வீழ்ந்தால் (Tail side) வீழ்ச்சியும் குறிக்கும்.

கேரள தேசத்தில் அஷ்டமங்கல ப்ரஸ்ணத்தில் ஸாமர்த்தியமுள்ள ஒரு பணிக்கர் இருந்தார். அவர் பலன்களை மிகவும் துல்லியமாகக் கூறியதால், பல ப்ரபுக்களும், ஜனங்களும் அவரிடம் வந்த வண்ணம் இருந்தனர். அதே ஊரில் அஷ்டமங்கலப் ப்ரஸ்ணம் பார்க்கும் ஒரு

நம்பூதிரியும் இருந்தார். பணிக்கரின் புகழைக் கண்டு நம்பூதிரிக்கு அசூயை ஏற்பட்டது. பணிக்கரை அவமானப்படுத்தும் நோக்குடன், நம்பூதிரி தன் வீட்டிற்குப் ப்ரஶ்னம் பார்க்க பணிக்கரை அழைத்தார்.

தன்னுடைய கன்யா குழந்தையை அழைத்து, ''பணிக்கர், உன்னை முதலில் ராசிச் சக்கரத்தின் முன் நிற்கச் சொல்வார். பின்னர் நகரச் சொல்வார். அப்பொழுது நீ சக்கரத்தைத் தாண்டிக் குதிக்கவேண்டும். பின்னர் உடலில் ஏதேனும் ஓர் அவயத்தைத் தொடச் சொல்வார். அப்பொழுது நாக்கின் அடியில் தொட வேண்டும்'' என்று கூறினார். அவர் இவ்வாறு கூறியது ஏனெனில், மேற்கூறிய இரு செய்கைகளுக்கும் அஷ்டமங்கல ப்ரஶ்ன ஶாஸ்திரத்தில் பலன் கூறப்படவில்லை. பணிக்கரும், ப்ரஶ்னம் பார்க்க வந்தார். அந்தப் பெண்ணும் அவ்வாறே செய்தாள். உடனே பணிக்கர், ''எப்பொழுது அஷ்டமங்கலப் ப்ரஶ்னன ஶாஸ்திரத்தில் கூறப்படாத ஒரு விபரீதமான செய்கை செய்தாயோ, அப்பொழுதே ஒரு தீட்டு ஏற்பட்டுவிட்டது. எனவே, இனி ப்ரஶ்னம் பார்க்க முடியாது'' என்று கூறிச் சென்றுவிட்டார். அவர் சென்ற சற்று நேரத்திற்கெல்லாம், நம்பூதிரியின் தந்தையாரின் மரணச் செய்தி வந்தது.

(தொடரும்)

அம்பினால் அடிபட்டும் கூட சில ஸமயம் தப்பித்துக்கொண்டு மானானது வெகுதூரம் காட்டிற்குள் சென்றுவிடும். உயிரும் பிரியாமல் மற்ற மான்களைப் போல் இயல்பாகவும் இருக்க முடியாமல் குற்றுயிரும் குலை உயிருமாகத் தவிக்கும். அதுபோல்தான் வைராக்யமில்லாமல் ஸந்யாஸம் வாங்கிக் கொண்டவனின் நிலைமையும். அவனிடம் உலக விஷயங்களை அனுபவிக்க வேண்டும் என்கிற ஆசை இருக்கும். ஆனால் அதற்கு அவன் ஏற்றுக் கொண்ட வேஷம் தடையாக இருக்கும். ஏற்றுக் கொண்ட வேஷத்தின்படி வைராக்யத்துடன் ஜப, த்யானம் செய்யலாம் என்றாலோ அதற்கு அவனது மனமே தடையாக உள்ளது. ஆகவே அவன் இகலோகத்தின் சுகத்தையும் அடைய முடியாமல், பரலோக சுகத்தையும் அடைய முடியாமல், பரலோக சுகத்தையும் அடையமுடியாமல் எதற்கும் ப்ரயோஜனமில்லாமல் போய்விடுவான்.

- ஸ்ரீ ஸ்வாமிகள்

# பாலகர்களுக்கு ஒரு கதை - 34

பூசலார் நாயனார் எனும் சிவபக்தர் திருநின்றவூர் எனும் திருத்தலத்தில் வாழ்ந்து வந்தார். இவரது உள்ள உணர்வெல்லாம் சிவபெருமானின் திருவடியிலேயே பதிந்திருந்தது. ஆகம, வேத, ஶாஸ்திர நெறிகளைக் கற்றுத் தேர்ந்திருந்த இவர் தன் உள்ளத்தை ஆக்ரமித்துக் கொண்டிருந்த சிவபெருமானுக்கு தம் ஊரில் எப்படியும் கோயில் ஒன்று கட்ட வேண்டுமென்று திருவுள்ளம் கொண்டார். ஆனால், அதற்குத் தேவையான செல்வத்தை அவரால் திரட்ட முடியாது சித்தம் கலங்கி ஏங்கினார்.

''புறத்தேதானே என் பெருமானுக்கு கோவில் எழுப்ப இயல வில்லை. அகத்திலே என் இறைவனுக்கு என் மனதிற்கு ஏற்ப எவ்வளவு பெரிய கோவில் வேண்டுமானாலும் கட்டலாமே?'' என்று தீர்மானித்தார். ஒரு கோவில் கட்டுவதற்குத் தேவையான பொருட்களை எல்லாம் மனதினாலேயே சேர்த்துக்கொண்டார். பின், ஒரு நல்ல நாள் பார்த்து, தனி இடத்திலே அமர்ந்து ஐம்புலன்களையும் அடக்கி தன் அகத்திலே, ஆகம முறைப்படி கோயில் கட்டத் தொடங்கினார். புறத்தே ஒரு பெரிய கோவில் கட்ட எவ்வளவு நாளாகுமோ அத்தனை நாட்கள் ஆயின, பூசலார் நாயனாருக்கு அகத்தே அக்கோவிலை எழுப்புவதற்கு!

ஒரு நன்னாளில் கும்பாபிஷேகம் நடத்தவும் தீர்மானித்து, நாளையும் குறித்துவிட்டார். இதே ஸமயத்தில், பல்லவ தேசத்து மன்னன் காஞ்சியிலே ஈசனுக்கு கற்கோவில் ஒன்று கட்டி முடித்து அதற்கு கும்பாபிஷேகம் நடத்த ஒரு நன்னாளை குறித்துவிட்டான். கும்பாபிஷேகத்திற்கு முதல் நாள் இரவு, இறைவன் அரசனின் கனவில் தோன்றி, ''அன்பா, திருநின்றவூரில் குடியிருக்கும் என் பக்தன் பூசலார் கட்டி முடித்திருக்கும் கோவிலுக்கு நாளை கும்பாபிஷேகம். அந்த ஆலயத்துள் நாளை நான் எழுந்தருள சித்தம் கொண்டுள்ளதால் நீ வேறு ஒரு நாளில் கும்பாபிஷேகத்தை வைத்துக் கொள்'' என்று ஆணையிட்டு மறைந்துவிட்டார்.

கனவிலிருந்து விழித்தெழுந்த அரசன் மிக்க வியப்புற்றான். அதே நேரத்தில் பூசலாரைச் சந்தித்து, இறைவனே எழுந்தருள ஆசைப்படும் அத்திருக்கோவிலை தரிசிக்கவும் ஆவல் கொண்டான்.



திருநின்றவூரை அடைந்த அரசன் ஊர் முழுவதும் கோவிலைத் தேடினான். எவருக்கும் அரசன் சொன்ன கோவில் எங்குள்ளது என்று தெரியவில்லை. பிறகு பூசலார் இருக்கும் இடத்தைத் தெரிந்துகொண்டு அவரைச் சென்று தரிசித்தான். அவரிடம் தான் கண்ட கனவைப் பற்றிச் சொல்லி, ''தாங்கள் அமைத்துள்ள திருக்கோவில் எங்குள்ளது?'' என வினவினான்.

அரசனின் மொழிகளைக் கேட்டு பூசலாரும் பெரும் வியப்பில் ஆழ்ந்தார். பின் அரசனிடம், ''அரசே! என் இறைவன் இந்த அடியேனையும் ஒரு பொருளாகக் கொண்டு திருவாய் மலர்ந்து அருளினர் போலும்! என் பெருமானுக்கு இத்திருவூரில் கோவில் எழுப்ப ஆசை கொண்ட என்னிடம் அதற்குண்டான பொருள் வசதியில்லாததால் என் அகத்தே என் விருப்பம் போல் ஒரு பெரிய கோவிலை கட்டி அதற்கு நாளை கும்பாபிஷேகம் செய்ய நாள் குறித்துள்ளேன்'' என்றார்.

இதைக் கேட்டு அரசன் அகவழிபாட்டின் பெருமையை உணர்ந்தான். பூசலார் நாயனாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். பின் காஞ்சிக்குத் திரும்பினான். பூசலார் நாயனாரின் உள்ளக் கோவிலில் நாயனார் குறித்த காலத்தில் சிவபெருமான் எழுந்தருளினார். அன்று முதல் பூசலார் நாயனார் தினந்தோறும் 5 காலமும் தன் உள்ளக்கோவிலில் இறைவனை வழிபட்டு சிவபெருமானின் திருவடியை அடைந்தார்.

இறைவன் மயங்குவது உள்ளன்புடன் செய்யும் அகபூஜையினாலேதான் என்பது இதிலிருந்து தெரிகின்றது அல்லவா! ■

---

பௌருஷம் இல்லாத கணவனை எப்படி மனைவி மதிக்க மாட்டாளோ, தவமில்லாத குருவை சிஷ்யர்கள் மதிக்க மாட்டார்கள்.

- ஸ்ரீ ஸ்வாமிகள்

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 61

### சேராயெனின் மெய் நீராய் உருகிக் கண்ணீற்றாற் அழிவேன் அருணாசலா

உருக்கமான பக்தியில், உத்தமமான **பா**வ லக்ஷணங்கள் ஏற்படும் என்று சொல்லி உள்ளது. ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு, ஸ்ரீ ராதாராணி, ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர் போன்ற மஹாத்மாக்களிடம் உயர்ந்த பக்தி, **பா**வ லக்ஷணங்களனைத்தும் பரிபூரணமாக இருந்தது என்பதை முன்னரே பார்த்தோம். இங்கு சொல்லப்படுவதும் உருக்கமான பக்தியே ஆகும்.

பக்தியில், பகவான் பக்தனை வந்து சேருவதும் உண்டு. பக்தன் பகவானைத் தேடிப் போய் சேருவதும் உண்டு. ''காந்தம் இரும்பு போல் கவர்ந்து எனை விடாமற்'' - காந்தம் இரும்பை இழுக்கும் இயல்புடையது. காந்தத்தை நோக்கி இரும்பானது ஓடும். அவ்வாறு இழுத்துச் செல்லப்படும் ஸமயத்தில், பார்ப்பதற்கு இரும்பு ப்ரயத்தனப்படுவது போல் தோன்றும். உண்மையில் இழுக்கப்படுவதற்கு இரும்பின் ப்ரயத்தனம் காரணமில்லை. காந்தத்தின் ஆகர்ஷணமே காரணம். இப்படி பகவான் பக்தனை ஆகர்ஷித்து ஆட்கொள்கிறான்.

ஒருக்கால் பெரிய இரும்பாக இருந்து, காந்தம் சிறியதாக இருந்தால், காந்தம் ஓடிப்போய் ஒட்டிக்கொண்டுவிடும். இதற்கு லகுத்வமே காரணம். இங்கு காட்டிய உவமானம் போல், அவ்வளவு பெரிய, உத்தம பக்தியாக இருந்தால், அங்கு ஈஶ்வரனும் கூட சிறியவனாகிவிடுகிறான். அந்த உயர்ந்த பக்தனை ஈஶ்வரன் தேடிப்போய் ஒட்டிக்கொள்கிறான். பகவானும், குருவும் ஏற்றுக் கொண்டால்தான் பக்தி ஶபலமாகிறது.

சகோர பக்ஷி என்று ஒன்று உண்டு. சந்திரனுக்காக ஏங்கியே வாழ்வைக் கழிக்கும் அது. பகலெல்லாம் சந்திரன் வராதா என்று ஏங்கி, இரவு, சந்திரன் வந்தவுடன், ஆசையால் சந்திரனைப் பார்த்து இரவு முழுவதும் 'கூ' 'கூ' என்று கூவிக்கொண்டே இருக்கும். பல பக்தர்கள் தன்னை சகோர பக்ஷியாகவும், க்ருஷ்ணனை சந்திரனாகவும் பாடியுள்ளனர். இது இரும்பு காந்தத்தை நாடுவதை ஒக்கும்.

ஸதாசிவ ப்ரும்மேந்திராள் என்ற ஒரு மஹாத்மா, 'மானஸ ஸஞ்சரரே' என்ற தனது கீர்த்தனையில், ''பரமஹம்ஸமுக சந்த்ர சகோரே'' என்கிறார். அதாவது, தன்னை சந்திரனாகவும், க்ருஷ்ணனை சகோர பக்ஷியாகவும் சொல்கிறார். இவருக்கு இப்படி சொல்வதற்கு எவ்வளவு காம்பீர்யம் வேண்டும்? அவர் ப்ரும்மஸாக்ஷாத்காரம் அடைந்தவர். ஆதலால் பரமஹம்ஸர். இவருக்கு இகத்திலோ, பரத்திலோ ஆக வேண்டியது ஒன்றுமில்லை. எல்லாம் அடிபட்டுப் போய்விட்டது.

ஸாதாரணமாக, லௌகீகர் ஒருவர், பகவானிடம் காம்யார்த்தமான பலன்களை வேண்டுவார். ஸாதகராக இருக்கும் பக்ஷத்தில் அவர் மோக்ஷமோ, ஞானமோ ஏதோ ஒன்று வேண்டுவர். ஆனால் ஸதாசிவ ப்ரும்மேந்திராளுக்கோ ஒன்றும் தேவையில்லை. எல்லாவற்றையும் கடந்தவர். ''எல்லாம் கடந்த நான் எப்பொழுதும் உன்னை க்ருஷ்ணா, க்ருஷ்ணா என்று கீர்த்தனம் பாடிக் கொண்டிருக்கிறேனே! இத்தகைய உத்தமமான பக்திக்கும், பக்தனுக்கும் நீ ஆசைப்படு'' என்று, க்ருஷ்ணனை சகோர பக்ஷியாகச் சொல்கிறார். பகவானும் கீதையில் இதையே, ''ஞானி மம ப்ரிய:'' - என்று ''ஆத்மஸாக்ஷாத்காரமடைந்த ஞானி செய்யும் பக்திக்கு நான் ஆசைப்படுகிறேன்'' என்கிறார்.

ஒரு தாயாருக்கு இரண்டு குழந்தைகள். ஒன்று கைக்குழந்தை. மற்றொன்று ஐந்து வயதுக் குழந்தை. குழந்தை அழுது அழுதே தாயாரிடம் காரியத்தை ஸாதித்துக்கொள்ளும். தாயார் மாடியில் வேலைக்குச் சென்றிருந்தாள். ஐந்து வயது குழந்தை கூப்பிட்டால், மேலே ஏறி வா என்கிறாள். அதுபோல் ஸாமர்த்தியமிருந்தால் தியானம் செய்து என்னை அடை என்கிறான் பகவான். கைக்குழந்தை அழுதால், தாயார் தானே இறங்கி வருகிறாள். தியானம் செய்ய இயலாவிடில் பகவானும் தானே இறங்கி வந்து தடுத்தாட்கொள்ளத் தயாராக இருக்கிறான்.

'சேராயெனில்' அப்பேர்ப்பட்ட உத்தமமான பக்தனாக நானிருந்தால், அருணாசலா! நீ இறங்கி வந்து என்னுடன் சேர்ந்து கொள். அவ்வாறு நீ வராவிடில், ''மெய் நீராய் உருகிக் கண்ணீற்றால் அழிவேன்''— அழுது, அழுதே உயிரை விட்டு விடுவேன் என்கிறார். அழுது அழுதே பகவானை அடைந்து விடமுடியுமா என்றால், முடியும், அம்மாதிரி நிகழ்ச்சிகள் நடந்து இருக்கின்றன.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பல கிராமங்களுக்கு பாகவத கிராமங்கள் என்று பெயர். ஸ்ரீதர அய்யாவாள், ஸ்ரீ போதேந்திராள், ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் போன்ற மஹாத்மாக்கள் அங்கு அவதாரம்

செய்து, நாமப்ரசாரத்தையும், பாகவத தர்மத்தையும் வலியுறுத்தி வந்ததால், அந்த கிராமங்களுக்கு பாகவத கிராமம் என்று பெயர்.

இந்த கிராமங்களில் வருடாவருடம் பாகவத மேளா நடக்கும். அப்படி பாகவதமேளா நடக்கும் காலத்தில், பகவத் விஷயமான நாடகம் போடுவது வழக்கம். ஒரு முறை, நரஸிம்ஹாவதார ஜயந்தி தினத்தன்று, நரஸிம்ஹாவதார நாடகம் நடந்தது. அதில் நரஸிம்மராக நடித்தவர், வாஸ்தவத்தில், ஹிரண்யகசிபுவாக நடித்தவரைக் கொன்றுவிட்டார். கொலை ஆகிவிட்டதால் கோர்ட் கேஸ் ஆகியது. அது இங்கிலீஷ்காரன் Period. ஆதலால், இவர்களுக்கு இதற்கு முன்னரே பரஸ்பர விரோதம் இருந்து, அதனால் இந்தக் கொலை நடந்ததா, அல்லது உண்மையிலேயே ந்ருஸிம்ஹ ஆவேசம் ஏற்பட்டு இப்படி நடக்கக் கூடுமா என்று பெரிய சர்ச்சை நடந்தது. இதற்கு தீர்வாக, இதே மாதிரி வேறு ஒரு டிராமா நடத்தி அதில் எவ்வாறு நடக்கிறது என்று ஒத்திகை (Rehearsal) பார்க்கலாம் என முடிவெடுத்தனர்.

அதன்படியே, ராமாயண டிராமா நடத்த முடிவெடுக்கப்பட்டது. முன்னர் நரஸிம்மராக நடித்தவருக்கு, இம்முறை தசரதராக வேஷம் கொடுத்து நடிக்கச்செய்தனர். நிகழ்ச்சியில், ராமர் காட்டுக்குப் போன கட்டம் வந்தது. தசரதராக நடித்தவர், ''என் பிரபு ராமன் காட்டுக்குப் போய்விட்டானே'' என்று அழுது அழுதே உயிரை விட்டுவிட்டார். இது அப்படியே நடந்த விஷயம். சரித்திரத்தில் எழுதி உள்ளனர்.

ஆதலால், 64 நாயன்மார்களின் சரித்திரம் படித்தாலும் சரி, பக்தர்களின் சரித்திரம் படித்தாலும் சரி, இம்மாதிரி நடந்திருக்க முடியுமா என எண்ணுவது மிகப்பெரிய தவறு. நம்மால் முடியாது என்பதினால், யாராலும் முடியாது என்று ஆகாது. நமக்கு யோக்யதை இல்லை என்றே ஆகும். இம்மாதிரி உருக்கமான பக்தி ஸம்பவங்களை நம்புவதற்கு ஒரு புத்தி இருந்தால் கூட போதும்.

அருணகிரிநாதர், ''கூகா என என்கிளை கூடி அழ'' - நான் இறந்தபின் நீ அனுக்ரஹம் செய்து என்ன பயன்? நான் அழியும் முன் ஓடிவந்து உனது அனுக்ரஹத்தை செய்துவிடு என்கிறார். அதுபோல், 'சேராயெனில்' - அருணாசலா, கருணை கூர்ந்து என்னிடம் வந்து சேர்ந்துவிடு. இல்லாவிடில், நான் அழிந்து போனபின் நீ வந்தால் என்ன ப்ரயோஜனம். நான் கண்ணீரால் அழிவதன் முன் உனது அனுக்ரஹத்தினால் என்னை காப்பாற்றிவிடு என்கிறார்.

(தொடரும்)

# மஹாபாரத கதைகள் - வன பர்வம்

**நளோபாக்யானம்**

அர்ஜுனன், வனவாஸத்தின்போது தேவ அஸ்திரங்களை பெறுவதன் பொருட்டு இந்திரலோகத்திற்கு சென்றிருந்தான். மற்ற பாண்டவர்கள் திரௌபதியுடன் காம்யக வனத்தில் வஸித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது ஒரு ஸமயம், அவர்களுக்கு அர்ஜுனனை பிரிந்து இருந்ததால் உண்டான துக்கம் மிகவும் மேலிட்டது.

பீமன் தர்மராஜனை பார்த்து சொல்லலானான், ''அண்ணா! எவனிடத்தில் நாம் உயிர் போன்ற ப்ரீதியை வைத்துள்ளோமோ அந்த அர்ஜுனன் உமது உத்திரவினால் அஸ்திரங்களை பெறச் சென்றான். அவனுக்கு ஒரு கேடு நேருமாயின் நாம் அனைவரும், க்ருஷ்ணரும் உயிரை விட்டு விடுவோம்.

எவன் ஒருவனின் கைகளை நம்பி நாம் இந்த த்ருதராஷ்டிர புத்ரர்களை வென்றுவிட்டதாகவும், பூமியை அடைந்துவிட்டதாகவுமே எண்ணுகிறோமோ அவனைப் பிரிந்து இருப்பதைக் காட்டிலும் துக்கம் என்ன இருக்கிறது. க்ருஷ்ணருடன் கூடின என்னால் கர்ணன் முதலியவர்களை அடித்து ஒழித்து, நீர் ராஜ்யத்தை ஆளும்.

க்ருஷ்ண பகவானை அழைத்தும், தவமிருக்கும் அர்ஜுனனை திரும்பவழைத்தும், த்ருதராஷ்டிரர்களுடன் யுத்தம் செய்வோம். இதுவே க்ஷத்திரிய தர்மம். இதிலிருந்து விலகி நீர், க்ஷத்திரிய தர்மத்திலிருந்து விலகிய தோஷத்திற்கு ஆளாகாதீர். இதற்குப்பின், மறுபடியும் நீர் விருப்பமிருப்பின் காட்டை அடையலாம். இதனால் வரும் பாவத்தை, பல யாகங்களால் போக்கிக் கொள்வோம். கபடமுள்ளவர்களை கபடத்தாலேயே கொல்ல வேணும். இதை நீர் செய்யாவிடில், அஜ்ஞாத வாஸத்தில் நாம் அநேகமாய் அழிந்து போய்விடுவோம்.

பாவியான துர்யோதனன் ஒற்றர்களால் நம்மை எவ்விதத்திலும் அறிந்து நம்மை துரத்தி, துன்புறுத்துவான். மறுபடியும் உம்மை சூதிற்கு அழைப்பான். சூதில் பிரியமுள்ள நீர், மறுபடியும் செல்வத்தை அழித்து விடுவீர். ஆதலால், எங்களை உயிருள்ளவராக செய்ய நீர் விருப்பம் கொண்டவரென்றால், எனக்கு உத்தரவு தருவீர். நான் என் சக்திக்கு தக்கவாறு துரியோதனனை கொன்று போடுவேன்'' என்றான்.

இப்படி கூறிய பீமனை, யுதிஷ்டிரர் ப்ரியமுடன் பார்த்து, ''பீம! நீ கபடமில்லாமலே அஜ்ஞாத வாஸத்திற்கு பின், அர்ஜுனனுடன் கூடி திருதராஷ்டிரர்களை அழிப்பாய். என்னால் பொய் சொல்வது இயலாது என்பது நீ அறிந்தது அல்லவா?'' என்றெல்லாம் கூறி ஸமாதானப்படுத்தினார்.

அப்பொழுது அங்கு, ப்ருஹதச்வர் என்னும் மஹா மஹரிஷி வந்தார். உடன் யுதிஷ்டிரர் விதிப்படி அவரை பூஜித்து, வரவேற்று, பணிவுடன் அமரச் செய்தார்.

மேலும் யுதிஷ்டிரர், மஹரிஷியிடம், ''ஸ்வாமி! சூதில் தோற்ற நான் எனது பத்னியுடனும், தம்பிமார்களோடும் மிகுந்த துன்பத்தை அடைந்து வருகின்றேன். ஸபையில் இழுத்து வரப்பட்ட த்ரௌபதியைப் பார்த்தும், ஏதும் செய்ய இயலாதவர்களாய் இருந்தோம். மறுபடியும் என்னை சூதிற்கு அழைத்தாலும் மறுப்பு தெரிவிக்க இயலாத நிலையில் உள்ளேன். எனது ப்ரியமானவனான அர்ஜுனனும் என்னை விட்டு பிரிந்து சென்று விட்டான். எனக்கு வாழ்க்கை முழுவதும் இரவு, பகல் இதே நினைவாக இருக்கிறது. என் பொருட்டு என்னுடன் இவர்கள் துக்கத்தை அனுபவிப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. என்னைப் போல் ஒரு அபாக்கியவான் யாரும் இவ்வுலகில் இல்லை. உம்மால் இந்த அளவு துக்கித்த எவனை பற்றியாவது கேட்டதுண்டோ?'' என வினவினார்.

உடன் மஹரிஷி, ''ஓ ராஜ! துக்கத்தில் மனதைச் செலுத்தாதே. அர்ஜுனன் க்ருஷ்ணருடன் கூடி, மறுபடியும் நீ ராஜ்யத்தை பெறுமாறு விரைவில் செய்வான். புத்திமானும், குற்றமற்றவனுமான நீ துக்கிப்பது அழகல்ல. உன்னைப் போல் ஒருவனுண்டோ என்று கேட்டதால், உனக்கு, உன்னிலும் மேலான துக்கமடைந்த நிஷதராஜனான நளனின் சரித்திரத்தை சொல்கிறேன். ஸகோதரர்களுடன் ஸாவதானமாக கேள். அவன் மனைவியுடன் வனவாஸத்தை தனியாக செய்தான். உனக்கு இருப்பது போல் அவனோடு, அன்று ப்ராஹ்மணர்களோ, வேலைகாரர்களோ, சகோதரர்களோ உடன் இருக்கவில்லை. அப்படி பெரும் துக்கமடைந்த நள மஹாராஜனின் சரித்திரத்தை கூறுகிறேன். கேட்டு உன் துக்கத்தை போக்கிக் கொள்'' என்றார்.

(தொடரும்)

## பிழை திருத்தம்

சென்ற இதழில், கீழ்கண்ட பிழைதிருத்தம் ஏற்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

| | | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| Page 16 | Line 4 | யோஹிதா: | மோஹிதா: |
| Page 5 | Line 5 | ஸ்வர்ணார்வம் | ஸ்வரார்ணவம் |

# செய்திகள்

### ஆகஸ்ட் 2-ந் தேதி — ஆடிப் பூரம்

சென்னை ப்ரேமிகபவனத்தில் காலையில் ஆடிப்பூரத்தை முன்னிட்டு ஆண்டாள் கல்யாணம் நடைபெற்றது.

இரவு 7.30 மணியளவில் மதுரை ஸ்ரீ T.N. சேஷகோபாலன் அவர்களின் கர்னாடக ஸங்கீத கச்சேரி நடைபெற்றது.

### ஆகஸ்ட் 10-ந் தேதி — ஏகாதஶீ

சென்னை ப்ரேமிகபவனத்தில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை அகண்ட விஷ்ணு ஸஹஸ்ரநாமம் பாராயணம் நடைபெற்றது.

### ஆகஸ்ட் 13-ந் தேதி

சென்னை, மயிலாப்பூர், R.R. சபாவில் Tambras Mandaveli Unit ஸார்பில் கோகுலாஷ்டமி ஒட்டி நடைபெற்ற ஒன்பதாம் ஆண்டு ப்ள்ளிகளுக்கான பஜனை போட்டி - 2000 விழாவில் நம் ஸ்வாமிகள் கலந்து கொண்டு அருளுரை வழங்கினார்கள்.

### ஆகஸ்ட் 19-ந் தேதி, 20-ந் தேதி

சென்னை ஆலப்பாக்கம், அஷ்டலக்ஷ்மி நகர், ஸ்ரீ ஆதிமூர்த்தி அவர்களின் க்ருஹமான மதுரமுரளி பவனத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் ஸீதா கல்யாணம் நடைபெற்றது. 19-ந் தேதி மதியம் அஷ்டபதியும் இரவு திவ்ய நாமமும் 20-ந் தேதி காலை ஸீதா கல்யாணமும் மதியம் பவ்வளிம்பும் நடைபெற்றன.

நம் ஸ்வாமிகள் ப்ரேரணையால் செம்பொன்செய் திருக்கோவில் திவ்யதேசம் பாலாலயம் நடைபெற்று திருப்பணிகள் துவக்கப்பட்டன.

### ஆகஸ்ட் 22-ந் தேதி

மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் ஏழாம் வருட ப்ரஹ்மோத்ஸவம் மதுரபுரி ஆஶ்ரமத்தில் கோலாஹலமாக ஆரம்பமாகியது.

### ஆகஸ்ட் 23-ந் தேதி

காவளம்பாடி திவ்யதேசம், ஸ்ரீ கோபாலன் திருவீதி புறப்பாடு, நம் ஸ்வாமிகள் சார்பில் நடைபெற்றது.

### ஆகஸ்ட் 26-ந் தேதி

திருபார்த்தனபள்ளி திவ்யதேசம் ஸ்ரீ கோலவல்லிராமர் திருக்கோவில் பெரியதிருமஞ்சனம், நம் ஸ்வாமிகள் சார்பில் நடைபெற்றது.

## நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

### செப்டம்பர் 2-ந் தேதி, 3-ந் தேதி

நம் ஸ்வாமிகள் ஆஜ்ஞையின்படி ஸ்ரீ பார்த்தனபள்ளி திவ்யதேசம் - ஸ்ரீ கோலவல்லி ராமர் ஸந்நிதி பாலாலயம் செய்யப்பட்டு திருப்பணிகள் துவங்குகின்றன.

### செப்டம்பர் 9-ந் தேதி, 10-ந் தேதி

நம் ஸ்வாமிகள் ப்ரேரணையினால் ஸ்ரீ திருமணிக்கூடம் திவ்யதேசம் - பாலாலயம் நடைபெறுகிறது.

### செப்டம்பர் 10-ந் தேதி, 11-ந் தேதி

நம் ஸ்வாமிகள் ஆஜ்ஞைபடி காவளம்பாடி திவ்யதேசம் பாலாலயம் நடைபெறுகிறது.

மங்களானி பவந்து